**கவனிக்க.-** *2015.10.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1936 - 2015 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2015.10.09**

*1936 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1542 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1544 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## திருத்தம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

*பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரலின் இறுதித் திகதியினை திருத்தம் செய்தல் - கம்பஹா மாவட்டம்*

*2015.07.30 ஆந் திகதிய 1926 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தை 2015.11.09 ஆந் திகதி வரை நீடிக்கப்படும் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.*

*2. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானது. இறுதித் திகதியில் மாத்திரம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | வத்தளை | வத்தளை-மாபோல பிரதேசத்தின் அலுத்குரு கோறளை தெற்குப் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

10-490

---

## திருத்தம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

*பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரலின் இறுதித் திகதியினை திருத்தம் செய்தல் - கம்பஹா மாவட்டம்*

*2015.07.30 ஆந் திகதிய 1926 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தை 2015.11.09 ஆந் திகதி வரை நீடிக்கப்படும் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.*

*2. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானது. இறுதித் திகதியில் மாத்திரம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | தொம்பெ | தொம்பெ பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு, கிழக்கு சியனே கோறளை பிரிவின் (பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

10-491

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, கார்த்திகை மாதம் 09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, செத்தெம்பர் 17.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | பன்னல | எலபடகம பிரதேசத்தின் கட்டுகம்பல ஹத்பற்று பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | பிங்கிரிய | கரகம்பற்று கோறளை பிரதேசத்தின் கட்டுகம்பல ஹத்பற்று பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | கனேவத்த | திட்டவெல்கல பிரதேசத்தின் ஹிரியால ஹத்பற்று பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

10-360

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவின் 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் - 2015

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவின் சேவை வகுதி 3 இன் கீழ்க்குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காகத் தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திரங்கள் இயக்குநர் (Offset Litho Printing Machine Operator) | 10 |
| (2) லெட்டர் பிரஸ் அச்சு இயந்திர இயக்குநர் (Letter Press Machine Operator) | 2 |
| (3) அச்சு பதிப்பு முன் திட்டமிடுபவர் (Pre-printing Planner) | 1 |
| (4) கணினி தட்டச்சு இடுபவர், அச்சுக் கோலம் வரைபவர் (Computer Type setter and Printing Designer) | 7 |
| (5) அச்சு வேலை முடிப்பவர் (Printing Finisher) | 2 |
| (6) அச்சக தொழில்நுட்பவியலாளர் (Printing Mechanic) | 2 |

1. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் பெறுபேறுகளின்படி தகைமைகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III பதவிகளின் வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

**2. சம்பளத் திட்டம்.**- இலக்கம் 06/2006 IV மற்றும் 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கேற்ப முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவின் 3 ஆம் சேவை வகுதியின் தரம் III, II, I இன் பதவிகளுக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டங்கள் :

ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665,

ரூபா 15,875 ஐத் தாண்டிச் செல்வதற்கு தரம் II இற்குப் பதவி உயர்வையும்,

ரூபா 17,745 ஐத் தாண்டிச் செல்வதற்கு தரம் I இற்குப் பதவி உயர்வையும் பெறுதல் வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உரியவாறு உதவித்தொகை வழங்க வேண்டும். இது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பதவியாகும். எனினும் திணைக்களத்தின்கீழ் தீவின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்ற நியமிக்கப்படக்கூடும். இச்சேவை வகுதியின் தரம் III இற்கு நடாத்தும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்படுபவர்கள் 3 ஆண்டுகால தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவர்.

**4. தகைமைகள்.**- முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவின் சேவை வகுதி 3 இன் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்க்கப் படுவதற்காகப் பின்வரும் தகைமைகள் பொருந்தும் :-

(அ) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்நடத்தை உடையவராகவும் சிறந்த உடல் நலத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். "அதன்படி 1997.11.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக மற்றும் 1980.11.06 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்" ;

(ஈ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

**கல்வித் தகைமைகள் :**

(1) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையின்போது சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு (2) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் ;

(2) கணினி தட்டச்சிடுபவர் மற்றும் அச்சுப்பதிப்பு கோலமிடுபவர் பதவிக்கு மாத்திரம் மேற்படி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் அவசியமாகும்.

(உ) **தொழிற் தகைமைகள் :**

(i) வகுதி 3 இன் தரம் III ஐச் சேர்ந்த அச்சக தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்காக அச்சக தொழில்நுட்பவியலாளர் மற்றும்/ அல்லது மின் தொழில்நுட்பவியலாளர் துறைக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்திலான சான்றிதழ் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அதனை ஒத்த மேற்படி துறைகளுக்கு உரியவாறு கற்றுப் பெற்ற வேறொரு சான்றிதழ்.

(ii) வகுதி 3 இன் தரம் III ஐச் சேர்ந்த ஏனைய சகல பதவிகளுக்கும் அந்தந்த பதவிகளுக்குப் பொருந்தும் துறைக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்திலான சான்றிதழ் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற அதனை ஒத்த மேற்படி துறைகளுக்கு உரியவாறு கற்றுப்பெற்ற சான்றிதழ்.

(எ) ***உடற் தகைமைகள்.***- எல்லா விண்ணப்பதாரிகளும் தீவின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவை செய்யவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதியளவான சிறந்த உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் போன்றே சேவையின் தேவை கருதி இரவு பகல் சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

* சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய தகைமைகளை 2015.11.06 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

5. **பரீட்சை நடைமுறை.**- இது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும் அதே சமயம் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

| | புள்ளி வழங்கும் பிரதான துறைகள் | ஆகக் கூடியளவான புள்ளி |
|---|---|---|
| (i) | மேலதிக கல்வித் தகைமை | 30 |
| (ii) | மேலதிக தொழில் தகைமை | 30 |
| (iii) | உரிய துறையில் அனுபவம் | 35 |
| (iv) | நேர்முகப் பரீட்சையின்போது காட்டிய திறமைகள் | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

* ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்குகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளி அளவுகளினுள், அப்புள்ளிகளை வழங்குவதற்கான விரிவான புள்ளித்திட்டமொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிலவும் வெற்றிடங்களுக்காக முன்னுரிமை அடிப்படை யில், ஆட்சேர்க்கப்படும்.

6. **போலியான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப் பங்களை நிரப்பும்போது மிகக் கவனமாக, சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி யாதாயினும் விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் எனக் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின்போது அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பின்னர் கண்டறியப் படுமாயின், அவரது விண்ணப்பதாரி தகைமை செல்லுபடியற்ற தாக்கப்பட முடியும். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொய்யானது எனக் கண்டறியப்படுமாயின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும். இப்பணத்தைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் 2015.11.06 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தீவிலுள்ள எந்த ஒரு அஞ்சல் நிலையத்திலோ அல்லது உப அஞ்சல் நிலையத்திலோ செலுத்த முடியும். அதற்காக வழங்கும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கட்டத்தில் கழன்று விடாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. அதே சமயம், காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. விண்ணப்பப்படிவம் ஏ4 (செ. மீ. 21 x 29) (சாதாரண அரை) தாளை உபயோகித்து-

(அ) இல. 1 தொடக்கம் 2 வரை பந்திகளை முதலாம் பக்கத்திலும் ;

(ஆ) இல. 3 தொடக்கம் 8 வரை பந்திகளைத் தாளின் இரண்டாம் பக்கத்திலும் ;

(இ) இல. 9 தொடக்கம் 11 வரையான பந்திகளை மூன்றாம் பக்கத்திலும் அதன் பின்னரான பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

* குறித்த மாதிரி படிவத்திற்கு ஒவ்வாத, பிழையின்றி பூரணப்படுத்தப் படாத, பூரணமற்ற தன்மையிலுள்ள விண்ணப்பப்படிவங்களில் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தக்கவாறு விண்ணப்பப்படி வத்தைப் பூரணப்படுத்தாமையால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும். அதே சமயம் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டிருந்த விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பது பற்றி விண்ணப்பதாரியே தேடிப்பார்த்து உறுதிசெய்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையாயின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை யுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கடைசித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்பதாக உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பிழையின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரி களுக்கு கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டையொன்றை வழங்குதல், விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தல்படியான தகைமை உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என கண்டறியப்படுமாயின் அவ்வா றானவர்களின் அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும்.

8.2 விண்ணப்பம் அனுப்பப்படுகின்ற உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதி 3 தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சை - 2015'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

8.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிசு சேவையைச் சேர்ந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள உத்தியோகத்தர், 2,40,360 ரூபா அல்லது அதற்குக்கூடிய திரட்டிய வருட சம்பளம் பெறுகின்ற அரச அல்லது மாகாண அரச சேவை உத்தியோகத்தர், அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2015.11.06 ஆந் திகதி ஆகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அத்தினத்தில் அல்லது அதற்கு முந்திய தினத்தில் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தபால் பெட்டி இலக்கம் 1503,
கொழும்பு.

9. **கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கிய உடன் அதுபற்றி குறிப்பிட்டு ஒரு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதிருக்குமாயின் அறிவித்தலில் குறிப்பிட்டிருந்தவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பெயர், உங்கள் முழுப்பெயர், விலாசம், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடப்பட வேண்டிய அதே சமயம் நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமொன்றிலுள்ள விண்ணப்பதாரியாயின், உங்களின் மேற்படி தகவல்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை தொலைநகல் மூலம் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அக்கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு முன்வைத்து விசாரித்தல் சிறந்தது. மேலும் உங்களின் தகவல்களை உறுதி செய்வதற்காக நீங்கள் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பதிவு அஞ்சல் செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயனாக அமையும்.

10. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பயணக் கடவுச்சீட்டு.

11. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறி நடந்தால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு அவர் உட்பட நேரிடும்.

12. இங்கு குறிப்பிடப்படாத யாதாயினும் விடயமொன்று இருக்குமாயின், அது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சைகள் தொடர்பான சட்டதிட்டங்களுக்கேற்ப நடந்துகொள்ள கட்டுப்பட்டுள்ளனர்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவின் 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை - 2015*

*Structured Interview for Recruitment to Grade III posts of the Management Assistant Technological Segment 3 Service Category - 2015*

(தரப்பட்ட கட்டத்தினுள் சரியான குறியீட்டையும் எண்ணையும் தெளிவாகக் குறிக்க.) (அலுவலக தேவைக்காக மாத்திரம்)

கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(1, 2, 3, 4, 5, 6 எனும் எண்களைப் பயன்படுத்தி உங்கள் விருப்பை மேற்படி கட்டத்தில் குறிக்க.)

| பதவிப் பெயர் | விருப்பு |
|---|---|
| 1. லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திரங்களைப் இயக்குபவர் (offset Litho Printing Machine Operator) | |
| 2. லெட்டர் பிரஸ் அச்சு இயந்திர இயக்குநர் (Letter Press Machine Operator) | |
| 3. அச்சுப் பதிவு முன் திட்டமிடுபவர் (Preprinting Planner) | |
| 4. கணினி தட்டச்சு இடுபவர், அச்சுக்கோலம் வரைபவர் (Computer Type setter and Printing Designer) | |
| 5. அச்சு வேலை முடிப்பவர் (Printing Finisher) | |
| 6. அச்சக தொழில்நுட்பவியலாளர் (Printing Mechanic) | |

1. 1.1 முதல் எழுத்துக்களை கடைசியாக இட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : PERERA A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

1.5 பால் :
பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

2. 2.1 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (தமிழில்) :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.2 2015.11.06 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

3.3 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

4. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. தரப்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :----.
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5. தொழில் தகைமை :

| பாடநெறி | பயின்ற ஆண்டு | தொழில்நுட்ப நிறுவனம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5.1 நீங்கள் முன்வைக்கும் சகல கல்விச் சான்றிதழ் தொடர்பிலும் அவை எந்த NVQ மட்டத்துக்குரியதென ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளனவென்று உறுதிப்படுத்தும் கடிதமொன்றை மூன்றாம் நிலை, மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவிடமிருந்து பெற்று, நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

6. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் :
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

7. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

8. நீங்கள் என்றாவது எந்த ஒரு குற்றம் தொடர்பாகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
ஆம்/ இல்லை

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக). ஆம் எனின் விபரங்கள் தருக : ஆம் ☐ இல்லை ☐

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய கட்டணம் :----.

பற்றுச்சீட்டைக் கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.

10. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவகையில் உண்மையானதும் சரியானதும் என அறியத்தருகின்றேன். இங்கு யாதாயினும் ஒரு பகுதியை நிரப்பாமையால் மற்றும்/ அல்லது பிழையாக நிரப்பியமையால் ஏற்படுகின்ற நட்டங்களை ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளும் பிழையின்றி நிரப்பப்பட்டுள்ளதெனவும் நான் அறியத்தருகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள யாதாயினும் தகவல் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னராயின் தகைமை இழந்தவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னராயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுவேன் எனவும் அறியத்தருகின்றேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த ஒரு தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ...................................................... எனக்கு தனிப்பட்ட முறையில் அறிந்தவரும் எனக்குத் தெரிந்தவரும் ஆவார். அவர் எனக்கு முன்பாக ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும் நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தைச் சான்றுப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

12. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
*(அரச/மாகாண அரச/அரச திணைக்கள சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது.)*

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ......................................... இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .............................................. ஆக சேவையில் ஈடுபடும் அதே சமயம், அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். மேற்படி பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இத்திணைக்களத் சேவையிலிருந்து அவரை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

10-335

---

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வளர்ப்புப் பாடசாலை நுழைவுக்கான போட்டிப் பரீட்சை - 2015

*2016/2018 ஆம் கல்வி ஆண்டுக்கான கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி*

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடாத்தப் படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி - 2016/2018 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு சீப்புக்குளம் இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் 2015, திசெம்பர் மாதம் கண்டியில் நடத்தப்படும். அதன் பொருட்டு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2. **டிப்ளோமா பாடநெறி தொடர்பிலான விபரங்கள் வருமாறு** :-

2.1 இப்பாடநெறி சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப் படும்.

2.2 இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற்பயிற்சி வேலைத்திட்டமாக அமைவதுடன், (அரசாங்கத்தில் தொழில் பெற்றுக்கொள்வதற்கு இத்தொழிற் தகைமைக்கு மேலதிகமாக அப்பதவிக்கு உரிய ஆட்சேர்ப்புச் செயன்முறையில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்).

2.3 பயிற்சிக் காலத்தின்போது மாணவர்களுக்கு நாளாந்த வதிவிட கொடுப்பனவு வழங்கப்படும் அதேவேளை ஏனையவற்றிற்கான செலவினை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

2.4 சில வேளைகளில் சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறுவதால் விடுதிகளில் இருந்து மாணவர்களை அனுப்புவது மாதத்தின் ஒரு வாரத்தின் இறுதி நாட்களில் மாத்திரமாகும்.

3. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :-**

3.1 (அ) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் மூன்றிலும் கட்டாயமாக திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு (4) திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்.) இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (இத்தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தெரிவுசெய்கையில் முன்னுரிமை வழங்கப்படும்)

அல்லது

(ஆ) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் மூன்றிலும் கட்டாயமாக திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்) இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே

தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி களுடன் ஆகக்குறைந்தது ஒரே அமர்வில் 5 பாடங் களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவது 3.1 (அ) இல் விண்ணப்பதாரர் சகலரும் தெரிவுசெய்ததன் பின்னர் வெற்றிடம் இருந்தால் மாத்திரம் ஆகும்.

3.2 விண்ணப்பதாரர் 2015.11.09 ஆந் திகதியன்று 17 வயதிற்கு குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

3.3 தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்டிராத மற்றும்/ அல்லது உரிய வயதெல்லையை மீறும் விண்ணப்பதாரரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 பெறுபேற்றினை எதிர்பார்த்து இருப்போர் விண்ணப்பிக்க வேண்டாம். அரச திணைக்களம் ஒன்றில் அல்லது நிறுவனம் ஒன்றில் இருவருட கால்நடை வளர்ப்பு பாடநெறியினை பின்பற்றும் மாணவர்கள் இப்பாடநெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவர்.

**4. விண்ணப்பங்கள் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பதாரரினால் ஏ4 அளவிலான தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். முறையாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

4.2 பரீட்சைக் கட்டணம் 150 ரூபா ஆகும். விண்ணப்பதாரர் "கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்" எனும் பெயருக்கு பேராதனை, மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 057100179027275 இற்கு வரவு வைத்து அதன் பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் ஓரத்தை மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றம் செய்ய முடியாது. இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2015.11.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு தபாலிடுதல் வேண்டும்.

4.4 விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2016/2018 ஆம் கல்வி ஆண்டுக்கான கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கான நுழைவு" எனும் சொற்றொடர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.5 விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். இவ்வாறு கோரப் பட்டிருக்கும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்காதவிடத்து விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சகல சான்றிதழ் களினதும் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**5. தெரிவுசெய்யும் முறை :**

5.1 இத்திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) ***கால்நடை வளர்ப்பு.-*** க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விவசாயப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக்கப்படும் பல்தேர்வு மற்றும் சிறு வினாக்களைக் கொண்டு அமைந்து இருக்கும். (நேரம் : 1 மணித்தி யாலம்)

(ii) பொது அறிவு : (நேரம் : 1 மணித்தியாலயம்)

5.3 எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது அவ்விரண்டிற்கும் தோற்றுவதன் பொருட்டு விண்ணப்பக்காரருக்கு எவ்வித கொடுப்பனவும் அரசினால் வழங்கப்படமாட்டாது.

5.4 பரீட்சை நடைபெறுகின்றபோது விண்ணப்பக்காரரால் தமது ஆளடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப் படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

5.5 விண்ணப்பதாரர் எவராயினும் ஒருவர் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அவரது மாணவத் தன்மையை உடன் நிறுத்துவதற்கும், அவ்வாறே பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கப்

பட்டு ஒரு மாதத்திற்குள் பயிற்சியை விட்டு விலகும் மாணவர்கள் தொடர்பில் பயிற்சியின் பொருட்டு அரசினால் அதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள் செலுத்துவதற்கும் கட்டுப்பட்டுள்ளார்கள். செலவின் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

6. சகல விண்ணப்பதாரரும் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபரினால்/ஓய்வுபெற்ற அதிபரினால், கிராம அலுவலரால், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படை அதிகார உத்தியோகத்தர் 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது மதகுரு ஒருவரினால் சான்றுப்படுத்திக்கொள்ளலாம்.

7. இவ்வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதாவது பொருந்தாத்தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமிடத்து சிங்கள மொழி மூலமே ஏற்புடையதாகும்.

(டாக்டர்) டீ. ஆர். ரீ. ஜீ. ரத்னாயக்க,
பதில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை,
2015, செத்தெம்பர் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வளர்ப்புப் பாடசாலை

**கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி - 2016/2018**

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : [ ]

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. முகவரி :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.
மாவட்டம் :----.

6. பிறந்த திகதி :
ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

7. 2015.11.09 ஆந் திகதியன்று உள்ளவாறான வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

8. தொலைபேசி இலக்கம் :----.

9. விண்ணப்பதாரரது கல்வித் தகைமைகள் :
(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் இன்றி வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

10. பணம் செலுத்திய வங்கி மற்றும் பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.)

[ ]

11. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :----.

12. பாடசாலையில்/நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :----.

13. கால்நடை வளர்ப்பில் ஏதாவது அனுபவம் பெற்று இருப்பின் அது தொடர்பான விபரம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

14. கிராம அபிவிருத்தி/ விவசாயம்/ சமூக சேவை/ விளையாட்டு தொடர்பான அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப் படல் வேண்டும்) :----.

15. உறவு முறையல்லாத இருவரது பெயர், முகவரி :

(1) ........................................ (2) ........................................
........................................ ........................................
........................................ ........................................

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலே என்னால் தரப் பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும், உண்மை யானவை என்றும், எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதிமொழிகின்றேன். எனது தெரிவின் பின்னர் இங்கு

தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவர் நிலை முடிவுறுத்தப் படுவதுடன், பயிற்சி பெறும் காலத்தில் எனக்காக அரசாங்கத் திற்கு செலவுகள் ஏதும் ஏற்பட்டு இருப்பின் அத்தொகையை நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

1. ........................................................................................
2. ........................................................................................
3. ........................................................................................

**கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவர் எனக்கு மிகவும் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும், அவர் மேற்குறிப்பிட்ட கையொப்பத்தை எனது முன்னிலையில் வைத்தார் எனவும் சான்றுபகர்கின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரது கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை).

10-434

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.